வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 07.02.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 38 | பக்கங்கள் : 12

# யாழில் இராணுவம் சட்டத்தை கையில் எடுக்க அனுமதியோம்!

## தையிட்டி திஸ்ஸ விகாரை கட்டுமானம் குறித்து சபையில் கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்ரவரி 07

**இராணுவத்தினர் சட்டத்தைக் கையில் எடுப்பதற்கு அனுமதிக்க முடியாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் புலமைச் சொத்து சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீது நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இராணுவத்தினர் யுத்தத்தில் ஈடுபட்டதன் காரணமாக அவர்கள் துரதிர்ஷ்டவசமாக தமிழர்களுக்கு எதிரான சிந்தனை கொண்டவர்க ளாக இருக்கிறார்கள்.

அதற்கு உதாரணமாக இராணுவத்தினரால் தையிட்டியில் நிர்மாணிக்கப்பட்ட சட்டவிரோத விகாரையை குறிப்பிடலாம்.

அப்போதைய



இராணுவத் தளபதியால் விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்டு ஒரு சில 11

வித்தியா கொலை வழக்கு:

## குற்றவாளிகள் தாக்கல் செய்த மனு மீது விசாரணை ஓகஸ்டில்

யாழ்ப்பாணம், பெப். 07

புங்குடுதீவைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவியின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் தாக்கல் செய்த மனு மீதான விசாரணைக்கு உயர்நீதிமன்றம் திகதி அறிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய யாழ்ப்பாணம் புங்குடுதீவைச் சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவியின் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக 11

## யாழ்.பல்கலையில் கறுப்புக்கொடி ஏற்றியோர் மீது சட்ட நடவடிக்கை!

### அரசிடம் கோருகின்றார் சரத் வீரசேகர

கொழும்பு, பெப். 07

சுதந்திரத்தினத்தன்று யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் கறுப்புக்கொடி ஏற்றியவர்களுக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற 11

## தையிட்டி 14 ஏக்கர் காணியும் திஸ்ஸ விகாரைக்கு உரியதே!

### யாழ்ப்பாண மாவட்ட செயலருக்கு பௌத்த மகா சம்மேளனம் கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 07

யாழ்ப்பாணம் , தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனை சூழவுள்ள 14 ஏக்கர் காணி என்பன விகாரைக்குச் சொந்தமானது எனவும், அதனை யாருக்கும் கையளிக்கமுடியாது என அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் யாழ் . மாவட்ட செயலருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

அந்தக் கடித்ததில் - கடந்த டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியை பொது மக்களுக்கு கையளிக்க 11

## சட்டமா அதிபரின் பரிந்துரைக்கு எதிராக ஊடகவியலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

ஊடகவியலாளர் லசந்த படுகொலை:

கொழும்பு, பெப். 07

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க பரிந்துரை செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஊடகவியலாளர்கள் இணைந்து உயர் நீதிமன்ற வாயிலில் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை 11




## திஸ்ஸ விகாரைக்கு மாற்றுக் காணியாக வழங்கவிருந்த காணி உறுதிகளில் சிக்கல்

யாழ்ப்பாணம், பெப். 07

தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணியாக வழங்கப்படவிருந்த காணியின் உறுதியில் சிக்கல்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநருக்கும் காணி உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

அதில், திஸ்ஸ விகாரை சட்டவிரோதக் கட்டடம் அமையப்பெற்றுள்ள காணி உரிமையாளர்களும் கலந்து கொண்டனர். அவர்களே 11

## ஆஸாத் மௌலானாவின் குற்றச்சாட்டு; எதுவுமே தெரியாது என்கிறார் கோட்டா

கொழும்பு, பெப். 07

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை நடத்த சதி செய்ததாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது ஆஸாத் மௌலானா சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி, இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் தயவு செய்து ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையைப் படிக்குமாறும், சி.ஐ.டி. அதிகாரிகள் அளித்த சாட்சியங்கள் உட்பட அந்த அறிக்கையில் உள்ளதைத் தவிர வேறு தனக்குத் தெரியாது எனவும் அவர் 11

## வட்டுக்கோட்டை வயோதிப பெண்ணிடம் நூதனமான முறையில் பணம் கொள்ளை!

யாழ்ப்பாணம், பெப். 07

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப் பகுதியில் தனியாக வசித்து வரும் வயோதிபப் பெண் ஒருவரின் 50 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் குறித்த வீட்டுக்கு சென்று, தான் கமநலசேவை திணைக்களத்தில் இருந்து வருவதாகவும், விவசாய அழிவுக்கு நட்ட ஈடாக குறித்த பெண்ணுக்கு 2 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்தப் பணத்தை பெறுவதற்கு 50 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார். 11



## ஆஸாத் மௌலானாவை கைது செய்ய சி.ஐடி.க்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார்!

### பிள்ளையான் அறிவிப்பு

கொழும்பு, பெப். 07

ஆஸாத் மௌலாணாவை நாட்டுக்கு மீண்டும் அழைப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளமை சிறந்த விடயம். சி.ஐ.டி. யினருக்கு ஒத்துழைப்பு வழங்கி ஆஸாத் மௌலானாவை கைது செய்ய உதவுவேன் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

உயிர்த்த 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தைப் பாவித்து நட்டஈடு பெற்றுக்கொண்ட உறுப்பினர்கள்!

## சபையில் பட்டியலை முன்வைத்த நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, பெப். 07

கடந்த 2021 ஆம் ஆண்டு தமது இல்லம் சேதமடைந்ததாகத் தெரிவித்து இழப்பீட்டைப் பெற்றுக் கொண்ட 43 உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் அவர்கள் பெற்றுக் கொண்ட பணத் தொகை தொடர்பான விவரங்கள் நேற்று பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டன.

ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவினால் இந்த வியடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி நம்பிக்கை நிதியத்திலிருந்து சாதாரண பொது மக்கள் நிதியுதவியை பெற்றுக் கொள்ள எவ்வளவு சிரமப்பட வேண்டும் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆனால், ஜனாதிபதி நிதியத்திலிருந்து முக்கியஸ்தர்கள் எவ்வளவு பணம் பெற்றுக் கொண்டுள்ளார்கள்? எந்த பிரிவில் இவர்கள் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது தொடர்பான விடயங்களை நாம் கடந்த காலங்களில் தெரியப்படுத்தியிருந்தோம்.

இந்த நிலையில், 2021 ஆம் ஆண்டு தங்களுக்கு சொத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு தொகை பெற்றுள்ளார்கள் தெரியுமா? சொத்துக்கள் பகுதியளிவில் சேதமடைந்தாலோ, அல்லது முழுமையாக சோமடைந்தாலோ கொடுக்கப்படக்கூடிய அதிக கூடிய நட்டஈட்டுத் தொகையே 25 இலட்சம் ரூபாய்தான்.

ஆனால், அதிகாரத்தை கையில் வைத்திருந்த நபர்கள் இந்த அதிகாரத்தை பயன்படுத்தி எவ்வளவு நட்ட ஈட்டைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் தெரியுமா? நான் இங்கே பெயர் விவரங்களுடன் தெரிவிக்கிறேன்.

கபில நுவான் அத்துகொரல - 5 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய், விமலவீர திஸாநாயக்க - 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், கீதா குமாரசிங்க- 9 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய், ஜனக திஸ்ஸ குட்டியாராச்சி - 11 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய், குணபால் ரத்னசேகர- 14 இலட்சத்து 12, 780 ரூபாய், பிரேம்நாத் சி தொலவத்த - 23 இலட்சம் ரூபாய், பிரியங்கர ஜயரத்ன- 23 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய், சம்பத் அத்து கொரல - 25 இலட்சத்து 40, 610 ரூபாய், ஜயந்த கெட்டகொட- 28 இலட்சத்து, 14,800 ரூபாய், விமல் வீரவன்ஸ- 29 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய், சன்ன ஜயசுமன- 33 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய், அகில எல்லாவெல- 35 இலட்சத்து 54, 250 ரூபாய், சமல் ராஜபக்ஷ - 65 இலட்சத்து 39ஆயிரத்து 374 ரூபாய், சந்திமவீரக்கொடி- 69 இலட்சத்து 48 ஆயிரத்து 800 ரூபாய், அசோக பிரியந்த- 72 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய், சமன் பரிய ஹேரத் - 105.2 இலட்சம் ரூபாய், ஜனக பண்டார தென் னகோன்- 105.5 இலட்சம் ரூபாய், ரோஹித அபே குண வர்த்தன- 116.4 இலட்சம் ரூபாய், சீதா அரம்பே பொல - 137.8 இலட்சம் ரூபாய், சஹான் பிரதீப் - 171.3 இலட்சம் ரூபாய், செஹான் சேமசிங்க - 185.1 இலட்சம் ரூபாய், இந்திக அநுருத்த - 195.5 இலட்சம் ரூபாய், மிலான் ஜயதிலக- 223 இலட்சம் ரூபாய், ரமேஷ் பத்திரன- 281 இலட்சம் ரூபாய், துமிந்த திஸாநாயக்க - 288 இலட்சம் ரூபாய், கனக ஹேரத் - 292 இலட்சம் ரூபாய், டி.பி. ஹேரத் - 321 இலட்சம் ரூபாய், பிரசன்ன ரணவீர- 327 இலட் சம் ரூபாய், டபிள்யு.பி. டி. வீரசிங்க- 372 இலட்சம் ரூபாய், சாந்த பண்டார - 391இலட்சம் ரூபாய், சனத் நிஷாந்த - 427 இலட்சம் ரூபாய், எஸ்.எம்.சந்திரசேன - 438 இலட்சம் ரூபாய், சிறிபால கம்லத் - 509 இலட்சம் ரூபாய், அருந்திக பெர் ணான்டோ - 552 இலட்சம் ரூபாய், சுமித் உடுக்கும்பர - 559 இலட்சம் ரூபாய், பிரசன்ன ரணதுங்க- 561 இலட்சம் ரூபாய், கோகிலா குணவர்தன - 587 இலட்சம் ரூபாய், மொஹான் சில்வா - 601 இலட் சம் ரூபாய், நிமல் லன்சா- 692 இலட்சம் ரூபாய், அலி சப்ரி ரஹீம் - 709 இலட்சம் ரூபாய், காமினி லொகுகே- 749 இலட் சம் ரூபாய், ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ - 934 இலட்சம் ரூபாய், கெஹலிய ரம்புக் வெல்ல- 959 இலட்சம் ரூபாய் போராட்டக் காலத்தில் தங்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகக் குறிப்பிட்டு, அரசாங்கத்திடமிருந்து இவர் கள் பெற்றுக் கொண்ட நட்டஈட்டுத் தொகையே இவை.

இந்த 43 பேர் மட்டும் தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, 122 கோடியே 41 இலட்சத்து 34 ஆயிரத்து 737 ரூபாவை நஷ்ட ஈடாகப் பெற்றுக் கொண்டுள்ளனர் - என்றார்.

# யாழ். இந்து மாணவரின் 'ரலன்ட் ஷோ' நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 07

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் 'ரலன்ட் ஷோ' எனும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வரலாற்றில் முதல் முறையாக தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய யாழ். இந்து மாணவர்களின் தமிழ் மற்றும் ஆங்கில நாடகங்களுடன் பல்வேறு இசை நிகழ்சிகளும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கான ஆதரவை பல்வேறு தரப்பினரிடம் இருந்து கல்லூரி சமூகத்தினர் வேண்டி நிள்கின்றனர். இந்த நிகழ்வு மூலம் பெறப்படும் நிதி முற்றுமுழுதாக யாழ் இந்துக் கல்லுரி இயல் இசை நாடக துறையின் விருத்திக்கு பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# தையிட்டி பௌத்த விகாரை குறித்து அர்ச்சுனாவின் கருத்துக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 07

தையிட்டி விகாரையை இடித்து அகற்றாமல் அந்த காணியின் உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணி வழங்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்த கருத்துக்கு, வட மாகாண காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் முரளிதரன் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், தையிட்டி விகாரை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இந்த கூட்டத்தில் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மத நல்லிணக்கத்தின் அடிப்படையில் தையிட்டி விகாரையை இடிக்கமுடியாதெனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் அந்த கருத்தை நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்விலும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் கருத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ள வட மாகாண காணி உரிமைக்கான மக்கள் இயக்கத் தலைவர் முரளிதரன், வட மாகாணத்தில் நிலவும் காணி பிரச்னை தொடர்பில் அவர் அறிந்திருக்கவேண்டும் எனவும் தெரிவித்தார். (அ)

# 3 மாதங்களுக்கு முன் காணாமற்போன மோ.சைக்கிள் காட்டுப் பகுதியில் மீட்பு

வடமராட்சி, பெப். 7

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியில் சில மாதங்களுக்கு முன்பு காணாமற்போன மோட்டார் சைக்கிள் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரின் பி.சி.என் 8166 என்னும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளே நித்தியவெட்டை காட்டுப் பகுதியில் இருந்து மருதங்கேணி பொலிஸாரால் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை. மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிளை நீதிமன்றில் முற்படுத்துவதற்கு மருதங்கேணி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-02)

# வவுனியா மாவட்டத்தில் நேற்று நெல் கொள்வனவு நடக்கவில்லை

வவுனியா, பெப். 07

வவுனியா நெற் சந்தைப் படுத்தல் சபையினால் நேற்று நெற்கொள்வனவு மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு செய்யப்படும் என தெரிவித்தபோதும் வவுனியா மாவட்டத்தில் உள்ள நெல் சந்தைப்படுத்தல் சபை விவசாயிகளிடம் இருந்து நேற்று நெல்லைக் கொள்வனவு செய்யவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

நெல் கொள்வனவுக்கான நிதி தமக்கு கிடைக்காமையினாலேயே நெல் கொள்வனவை முன்னெடுக்கவில்லை என்றும், எதிர்வரும் திங்கட்கிழமைக்கு பின்னரே நெல் கொள்வனவை மேற்கொள்ள முடியும் என நெல் சந்தைப்படுத்தும் சபையினர் தமக்கு தெரிவித்தனர் என விவசாயிகள் கூறினர். (அ)

# தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க என்னாலான முயற்சிகளை எடுப்பேன்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 07

இடம்பெயர்ந்த மக்களின் வலி - வேதனை எனக்குத் தெரியும். காணி என்பது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் உணர்வு பூர்வமான விடயம். மீள்குடியமர்வுக்கான நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ந்து பேச்சுகளை நடத்தி வருகின்றேன். அரசாங்கமும் அந்த விடயத்தில் நேரான சிந்தனையில்தான் உள்ளது. படிப்படியாக காணிகளை விடுவிக்க என்னாலான அனைத்து முயற்சி களையும் எடுப்பேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும் காணி உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் காணி உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், ஒவ்வொரு மாவட்டத்திலும் காணி தொடர்பான பிரச்னை களை எதிர்கொள்ளும் மக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

“யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கில் முன்னைய ஜனாதிபதியின் காலத்தில் 243 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டிருந்தது. அந்தக் காணியை விவசாயக் காணி என்று தவறாக அடையாளப்படுத்துகின்றனர். அது மக்களின் குடியிருப்புக் காணி. அந்தப் பகுதியிலுள்ள இராணுவ முகாமும் இன்னமும் அகற்றப்படவில்லை.

மக்கள் குடி யிருக்கவும் அனுமதிக்கப்படவில்லை. ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கலந்து கொண்ட மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் வலி. வடக்கில் இன்னமும் மீள்குடியமர வேண்டியவர்களின் எண்ணிக்கை தொடர்பில் தவறான தகவல் வழங்கப்பட்டுள்ளது. எமது காணிகளில் பாதுகாப்புத் தரப்பினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இப்போதும், எமது காணிகளுக்குள் பாதுகாப்புத் தரப்பினர் புதிய கட்டடங்களை அமைக்கின்றனர். பலாலி வீதியில், இன்னமும் மூன்று கிலோ மீற்றர்கள் விடுவிக்கப்பட்டாலே மக்களுக்கு முழுமையான நன்மை கிடைக்கும். விமான நிலையத்துக்கு மேலதிகமாக காணிகள் சுவீகரிக்கப்படத் தேவையில்லை. ஏற்கனவே சுவீகரித்த காணிகளே போதுமானது“ என ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று, தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டவிரோத கட்டடம் எனவும் விகாரைக்கு உரியதான காணியை மாற்றுக் காணியாக வழங்கினாலும் அது தொடர்பிலும் சந்தேகம் இருப்பதாகவும் காணி உரிமையாளர்கள் இந்தச் சந்திப்பில் தெரிவித்தனர். மாற்றுக்காணியின் உறுதியில் சிக்கல் இருப்பதாகவும் சுட்டிக் காட்டிய அவர்கள், தமது காணிகளை விடுவித்துத்தர வேண்டும் என்று கோரினர்.

இதன்போது, கருத்து வெளியிட்ட ஆளுநர், காணி உரிமையாளர்களின் கோரிக்கைக்கு மாறாக நான் நடந்து கொள்ளமாட்டேன். காணி உரிமையாளர்கள் விரும்பாத எந்தவொரு தீர்வையும் திணிப்பதற்கும் நான் தயாரில்லை எனக் குறிப்பிட்டார்.

(எ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.02.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், தை 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஜே.வி.பியின் புதிய அரசியலமைப்பு

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதை விடவும் பொருளாதார பிரச்னைகளுக்கே தமது அரசாங்கம் முன்னுரிமையளிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளித்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கின்றார். இது ஏற்கனவே ஈழநாடு அனுமானித்திருந்த விடயம்தான் அத்துடன் இவ்வாறான நிலைமை ஏற்படும் என்பதையும் முன்னைய தலையங்கங்களில் சுட்டிக்காட்டியிருந்தோம். தற்போதுள்ள நிலையில் பொருளாதார பிரச்னை முக்கியம் என்பதை விடவும், புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதில் பல சவால்கள் உண்டு. ஒரு வேளை அவ்வாறான முயற்சி அரசாங்கத்தின் வீழ்சிக்கும் வழிவகுக்கக் கூடும்.

புதிய அரசியலமைப்பு என்பது உண்மையில் அவசியமற்ற ஒன்று - ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அவ்வாறான வாக்குறுதியை பொது மக்களுக்கு வழங்கியிருந்தது. ஆனால் கடந்த காலங்களில் இவ்வாறான வாக்குறுதிகளை வழங்கிய அரசாங்கங்கள் அதனை நடைமுறைப்படுத்தவில்லை என்பதுடன், அதற்கான முயற்சிகளைக் கூட மேற்கொள்ளவில்லை. சந்திரிகா குமாரதுங்கவும் பல வாக்குறுதிகளுடன், தமிழ் மக்களின் ஆதரவில், அதிகாரத்தை கைப்பற்றியிருந்தார் ஆனால் அவர் எதிர்பார்த்தவாறு எதனையும் முன்னெடுக்க முடியவில்லை.

புதிய அரசியலமைப்பு ஒன்றுக்கான முயற்சியை நல்லாட்சி அரசாங்கம் என்று தங்களை அழைத்துக் கொண்ட, ரணில் - மைத்திரி அரசாங்கம் முன்னெடுத்தது. இது தொடர்பான நம்பிக்கையை சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பும் பரப்பியது. ஆனால், இறுதியில் அந்த முயற்சி பரிகசிக்கத்தக்க வகையில் முடிவுற்றது. அவ்வாறானதொரு நிலைமை தங்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் எச்சரிக்கையுடன் இருப்பதாகவே தெரிகின்றது.

உண்மையில் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதில் உறுதியாக இருந்தால் ஆட்சியை கைப்பற்றியவுடன் அதனை முன்னெடுத்திருக்க வேண்டும் - காலத்தை கடத்தினால் பல சவால்கள் ஏற்படும். ஆனால் தற்போது அரசாங்கம் காலம் தாழ்த்தியே அதனை முன்னெடுக்க வேண்டும் என்றவாறான அபிப்பிராயத்தையே முன்வைத்துவருகின்றது.

உண்மையில் புதிய அரசியலமைப்பு நாட்டுக்குத் தேவையா என்றால் - தேவையற்றது என்பதுதான் பதிலாக இருக்க முடியும் ஏனெனில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று, தேசிய இனப்பிரச்னையை தீர்க்கும் விருப்புறுதி அரசாங்கத்திடம் இல்லை. இவ்வாறானதொரு நிலையில் எதற்காக புதிய அரசியலமைப்பு தொடர்பில் நேரத்தை விரயமாக்க வேண்டும். ரணில் - மைத்திரி காலம் என்பது அவ்வாறான கால விரையக் காலம்தான். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கக் கூடும். அதேவேளை, புதிய அரசியலமைப்பு விடயத்தை அரசாங்கம் உச்சரித்தால், அரசாங்க எதிர்பாளர்கள் அனைவருக்கும் மெல்லுவதற்கு அவல் கிடைத்துவிடும். எதுமின்றியே அவர்கள் குமுறிக் கொண்டிருக்கின்றனர். தவிர, புதிய அரசியலமைப்பை கருத்தில் கொண்டு சாதாரண சிங்கள மக்கள் அநுர குமாரவையும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தையும் அதிகாரத்திற்கு கொண்டுவரவில்லை.

# வறிய மக்களின் பொருளாதாரத்தை அபகரிக்கின்றது யாழ். மாநகரசபை

## பழக்கடை வியாபாரிகள் எதிர்த்து போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.07



யாழ். மத்திய பேருந்து நிலைய வளாகத்தின் பின்புறமாக வைரவர் கோவில் வீதியில் உள்ள பழக்கடை வியாபாரிகள் யாழ். மாநகர சபையின் மனிதாபிமானமற்ற செயல்பாட்டை கண்டித்து வியாபார நடவடிக்கைகளை இடைநிறுத்தி போராட்டம் ஒன்றை நேற் றையதினம் முன்னெடுத்தனர்.

குறித்த பகுதியில் தற்காலிக கடைகளை அமைத்து பழங்களை விற்பனை செய்துவரும் வியாபாரிகள் இந்த மனிதாபிமானமற்ற செயல்பாட்டால் தமது குடும்ப வருமானம் முழுமையாக மாநகர சபையினரால் பறிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினர்.

யாழில் தமது கடை தொகுதியின் முன்றிலில் போராட்டத்தை நடத்திய பழக்கடை உரிமையாளர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வியாபாரிகளாகிய நாம் அன்று அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைவாக எமது வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவை கொண்ட ஈ.பி.டி.பியின் ஆட்சி அதிகார வரையறைக்குள் யாழ். மாநகர சபை இருந்தபோது இந்த கடைகள் எமக்கு வழங்கப்பட்டன.

இதற்காக நாம் யாழ். மாநகர சபைக்கு ஆரம்பத்தில் 3000 ரூபாயும் தற்போது 7500 ரூபாயும் வரியாக செலுத்தி வருகின்றோம். இந்த நிலையில் தற்போதும் மேலும் 300 ரூபாய் வரி உயர்வு என கூறுகின்றனர். அதையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

இதேநேரம், கடைகளின் முகப்பு போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாக அதிகாரிகள் எம்மிடம் தெரிவித்ததற்கு இணங்க அதையும் சில அடிகள் உள்ளே எடுப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளோம்.

இதேநேரம் வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு கடைகளை அமைத்து ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் தொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் ஒரு கடையில் குறைந்தது மூன்று பேர் வேலை செய்கின்றனர்.

இங்கு 31 கடைகள் உள்ளன. இவற்றில் குறைந்தது 100 பேர் தொழில் செய்கின்றனர். அதுமட்டுமல்லாது 100 குடும்பங்களின் வாழ்வாதாரம் இதில் தங்கியுள்ளது.

இந்த நிலையில், யாழ். மாநகர சபை அதிகாரிகள் எமது கடைகளின் அளவை அதாவது அகலத்தை குறைத்து அடையாளமிடும் நடவடிக்கையை நேற்று முன்தினம் முன்னெடுத்தனர். ஆனால், நாம் எதிர்ப்பு காட்டியதை அடுத்து அது தடுத்து நிறுத்தப்பட்டது.

ஏற்கனவே, 6 அடிகள் தான் ஒரு கடைக்கான இடப்பரப்பாக வழங்கப்பட்டது.

இந்த 6 அடிகள் பொருட்கள், பழங்களை வைத்து விற்பனை செய்யும் தளபாடங்கள், குறைந்தது 3 வியாபாரிகள் என வியாபார நடவடிக்கைகளை கடும் சிரமத்தின் மத்தியில் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த நிலையில் அந்த 6 அடி அகலத்தையும் மேலும் குறைக்க நடவடிக்கை எடுக்க தற்போது முயற்சி செய்து அதற்கான அடையாளமிடலுக்காக வருகை தந்து நடவடிக்கை மேற்கொள்ள முயற்சித்தனர். அதற்கும் நாம் கடும் எதிர்ப்பு தெரிவித்து, அந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தியிருந்தோம்”- என்றனர். (எ-05)

# தங்கப் பதக்கம் வென்ற மாணவர்கள் கௌரவிப்பு


யாழ்ப்பாணம், பெப்.07



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலிருந்து தேசிய ரீதியில் இளம் விவசாய விஞ்ஞானி - தங்கப் பதக்கம் வென்ற 5 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வட்டு. இந்துவின் முதல்வர் லங்கா பிரதீபன் தலைமையில் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இதில் கல்லூரியின் பழைய மாணவரும் ரட்ணம் பௌண்டேஷன் ஸ்தாபகருமான கலாநிதி ரட்ணம் நித்தியானந்தன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அத்துடன் விவசாய போதனாசிரியர் ரமேஷ், ஆசிரிய ஆலோசகர் அருந்தவம், வடமராட்சி களக் கற்கை நிலைய முகாமையாளர் கோகுலராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு தேசிய ரீதியில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவித்தனர். (எ-02)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி - 07 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - தை 25
நல்ல நேரம்:9.00 -10.30
ராகு காலம்:10.30 -12.00
திதி :தசமி




**மேடம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கை மாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்னைகள் அதிகமாகும். இடம் ,பொருள்,ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். சகோதரர் வகையில் மனத்தாங்கல் வரும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

**கடகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். இனிமையான நாள்.

**சிம்மம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் ஆதாயமும் உண்டு. வராது என்று இருந்த பணம் கைக்கு வரும் வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். விலை உயர்ந்த மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**தனுசு**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். செல வுகளை குறைக்க திட்டமிடுவீர்கள். நட்புவட்டம்விரிவடையும்.

**மகரம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். புது வேலை கிடைக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். சொந்த - பந்தங்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில்போட்டிகளை எதிர்கொண்டு வெற்றிகாண்பீர்கள்.

**மீனம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களால் நன்மை உண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

### சிவபூமி அறக்கட்டளையால்

# யாழ். போதனா மருத்துவமனைக்கு 14 புதிய கட்டில்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், பெப்.07

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் புதிதாக திறக்கப்பட்ட மகப்பேற்று விடுதிக்கு 14 புதிய கட்டில்கள் சிவபூமி அறக்கட்டளையின் அனுசரணையுடன் வழங்கப்பட்டன.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர்கலாநிதி ஆறு. திருமுருகன், நேற்று முன்தினம் மருத்துவமனைக்கு வருகை தந்து, மேற்படி கட்டில்களை 18 ஆம் இலக்க மகப்பேற்று விடுதியில் கையளித்தார்.



யாழ். போதனா மருத்துவமனைக்கு மேலும் புதிய கட்டில்கள் மூலம் பழைய கட்டில்களை மாற்றீடு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

சிவபூமி அறக்கட்டளையின் ஊடாக இவ்வாறு கட்டில்களை போதனா மருத்துவமனைக்கு வழங்குவதன் மூலம் நோயாளர் சேவை மேலும் வளமடையும் என மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (எ-02)

# கலைத்தூது அழகியல் கல்லூரி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.07

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 14 ஆவது பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.கல்லூரியின் அதிபர் திரு மதி மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி சி. ரகுராமும் , சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலய நடன பாட ஒய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமாரும்கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும்நடைபெறவுள்ளன.(எ)

# தனங்கிளப்பு உப்பு உற்பத்தி நிலையத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் திட்டம்

யாழ்ப்பாணம், பெப். 07

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் உப்பு உற்பத்தி நிலையத்தை மீளவும் ஆரம்பிக்கும் நோக்கில் தேசிய உப்பு நிறுவனத் தலைவர் ஹயன் வெல்லால நேற்று முன்தினம் கள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.

புதிய அரசின் திட்டத்துக்கு அமைவாக உள்ளூர் உற்பத்தியை அதிகரித்தல், இறக்குமதிச் செலவீனங்களைக் குறைத்தல் ஆகியவற்றுக்கு அமைவாக கடந்த காலத்தில் சாவகச்சேரி, தனங்கிளப்பு பகுதியில் இயற்கையாக உப்பு வளம் அடையாளம் காணப்பட்ட நிலையில் தற்போது அங்கு உப்பு உற்பத்தி நிலையத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் இந்த உப்பளத் திட்டத்துக்குப் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் உரிய அனுமதிகள், பிரதேச சபையின் அனுமதி மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் பங்களிப்புடன் பயனாளிகள் தெரிவு ஆகியன இடம்பெற்ற போதிலும் சில காரணங்களால் தடைப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது மீளவும் அதனை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் ஊடாக பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

இந்த உப்பள நிறுவனம் தனியார், பொதுமக்கள் பங்குடமை நிறுவனமாகச் செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-02)

# யாழில் 11 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.07

யாழ்ப்பாணம் - ஆறுகால் மடம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 11 லீற்றர் கசிப்புடன், நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# மணல் கடத்திய உழவியந்திரம்மீது யாழில் பொலிஸார் வெடி வைப்பு!

யாழ்ப்பாணம், பெப்.07

யாழ்ப்பாணத்தில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் கடத்தலில் ஈடுபட்ட உழவியந்திரம் ஒன்றை நேற்று முன்தினம் பொலிஸார் வெடி வைத்து மடக்கிப்பிடித்தனர்.

இந்த உழவியந்திரம் குருநகர் பகுதியால் மணல் ஏற்றிச் சென்றவேளை, குருநகர் பகுதியில் உள்ள பொலிஸ் காவலரணில் பணிபுரியும் பொலிஸார் அந்த உழவியந்திரத்தை துரத்திச் சென்றனர். பின்னர் அரியாலை பகுதியில் வெடி வைத்து உழவியந்திரத்தை பறிமுதல் செய்ததுடன், சாரதியையும் கைது செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் பிரச்னையை ஓரிரு வாரங்களில் தீர்க்கமுடியாது

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, பெப். 07

**இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய கடற்றொழிலைக் கட்டுப்படுத்துவதற்காகச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், ஓரிரு வாரங்களில் இந்த பிரச்னையைத் தீர்க்க முடியாது எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-இது நீண்டகாலமாக நிலவும் பிரச்னையாகும்.

பல அரசாங்கங்கள் கலந்துரையாடிய பிரச்னையாகும். இந்திய - இலங்கை அரசாங்கங்களுக்கு இடையே பல சந்தர்ப்பங்களில் இது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன.

இதன்படி, புதிய அரசாங்கம் ஆட்சியமைத்ததன் பின்னரும் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்த பின்னணியில் இலங்கைக் கடற்படை சுற்றி வளைப் புகளையும் கைது நடவடிக்கை களையும் அதிகரித்துள்ளது.

அதேநேரம் இந்த விடயம் தொடர்பில் இந்தியாவுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஓரிரு வாரங்களில் இந்த பிரச்னைக்குரிய தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என நினைக்கவில்லை. இலங்கையின் கடல் வளத்தையும், கடற்றொழிலாளர்களையும் பாதுகாப்பதே எமது பிரதான இலக்காகும்- என்றார். (அ)

# காற்று மாசுபாட்டால் வருடத்துக்கு 7 மில்லியன் பேர் வரை உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 07

காற்று மாசுபாட்டால் உலகளவில் வருடத்துக்கு 7 மில்லியன் பேர் வரை உயிரிழப்பதாகச் சுவாச மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார கல்வி பணியகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அந்த சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் நிரஞ்சன் திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

தூசி உள்ளிட்டவை நுரையீரலைச் சென்றடையும் போது அதிக பாதிப்புகள் ஏற்படுகின்றன.

கடந்த காலங்களில், புகைபிடிப்பவர்களுக்கு மாத்திரம் நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டிருந்தபோதிலும் தற்போது அசுத்தமான காற்றைச் சுவாசிப்பதாலும் நுரையீரல் பாதிப்பு ஏற்படுவதாக இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த விசேட வைத்திய நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக இந்தியாவில், நுரையீரல் பாதிப்படைந்த பெண்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அந்தளவுக்குக் காற்று மாசடைந்து வருவதாகச் சுவாச மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் நிரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்தார். (அ)

# புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்தும் அரசு!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 07

கனடா உட்பட வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் தலைமீட்டாலேயே வடக்கு மாகாணத்தைத் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியது எனவும், அதனால்தான் டயஸ்போராக்களை திருப்திப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயல்பட்டுவருகின்றது எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் இயல்பாக வாக்குகள் கிடைத்திருக்கும் என நான் நம்பவில்லை. ஏனெனில் அங்குள்ள குடும்பங்களில் 90 சதவீதமானவற்றில் எவரேனும் ஒருவர் வெளிநாட்டில் இருப்பார். அவர்கள் அங்கு பலமாக உள்ளனர். எனவே, அங்கிருந்து வரும் தகவலுக்கமைய இங்கு தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கப்படலாம்.

அந்த சக்திகளை (புலம்பெயர்) திருப்திப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதை காணமுடிகின்றது. இராணுவ முகாம்கள் அகற்றப்படுகின்றன. நல்லாட்சி காலத்திலும் முகாம்கள் அகற்றப்பட்டன. அத்தியாவசியமானவை எனக் கருதி வைக்கப்பட்டிருந்தவற்றில் இருந்துதான் தற்போது அகற்றல் இடம்பெறுகின்றது.

மகிந்த ராஜபக்ஷவை வீட்டில் இருந்து வெளியேற்ற முற்படுகின்றமை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்ய முற்படுகின்றமை உட்பட பல நடவடிக்கைகள் இவ்வாறு டயஸ்போராக்களை திருப்திப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுவருகின்றன.

அநுரகுமார இன்று சுதந்திரமாக யாழ்ப்பாணம் செல்வதற்குகூட, போரை முடிப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ வழங்கிய அரசியல் தலைமைத்தவம்தான் காரணமாகும் என்பதை மறக்கக்கூடாது- என்றார். (அ)

# விவசாயி,நுகர்வோரை காக்கும் வகையிலே நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயம்!

## சுனில் ஹந்துன்நெத்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 07

நெல்லுக்கு உத்தரவாத விலையை வழங்குவதற்கான தீர்மானம் விவசாயி மற்றும் நுகர்வோர் இருவரையும் பாதுகாக்கும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியிடம் எந்த தலைப்புகளும் இல்லாததால் அவர்கள் பல்வேறு தலைப்புகளை உருவாக்கி வருவதாக அவர் கூறினார்.

நாட்டில் குரங்கு பிரச்னைப் பற்றிய சத்தம் அப்படித்தான் அடங்கிப் போனது என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டார்.

அவர்கள் அரிசி இல்லை என்று ஒரு கதையை உருவாக்கினர், இப்போது அதை நெல் என்று மாற்றப் போகிறார்கள் என அமைச்சர் கூறினார்.

நெல்லுக்கு உத்தரவாத விலையை வழங்குவதற்கான தீர்மானம் விவசாயி மற்றும் நுகர்வோர் இருவரையும் பாதுகாக்கும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என்று ஹந்துனெத்தி தெரிவித்தார்.

அதன்படி, விவசாயிக்கு 120 ரூபாய் உத்தரவாத விலை வழங்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

இதன் மூலம், மூன்று அல்லது நான்கு பேருக்குச் சொந்த மான அரிசி ஏகாதிபத்தியம் இல்லாமலாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுனில் ஹந்துன் னெத்தி கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் சட்டம் இரண்டும் முறையாகச் செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# இலங்கையுடன் கைகோர்க்கும் இந்தியாவின் இந்துஸ்தான் பெற்றோலியம் லூப்ரிகண்ட்ஸ்!

கொழும்பு, பெப். 07

இந்தியாவின் முன்னணி எண்ணெய் நிறுவனங்களில் ஒன்றான இந்துஸ்தான் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதியாக இருக்கும் இந்துஸ்தான் பெற்றோலியம் லூப்ரிகண்ட்ஸ், சீ வேர்ல்ட் லங்காவுடன் இணைந்துள்ளது.

இது இலங்கையில் மசகு எண்ணெய் சந்தையைக் கணிசமாக வலுப்படுத்தும் என்று கூறப்படுகிறது.

இலங்கை-இந் தியா வர்த்தக உறவுகளை ஒரு முக்கியமான பகுதியில் முன்னேற்றும் இந்த முயற்சி, கொழும்பில் நடை பெற்ற ஒரு பிரமாண்டமான தொடக்க விழாவில் ஆரம்பிக் கப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர் சத்யஞ்சல் பாண்டே, வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினரா கக் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# டிஜிற்றல் ஏற்றுமதி மூலம் வருடத்துக்கு 5 பில்லியன் டொலர் வருவாய் ஈட்டலாம்

## ஜனாதிபதியின் ஆலோசகர் ஹான்ஸ் விஜயசூரிய

கொழும்பு, பெப். 07

2030 ஆம் ஆண்டுக்குள், டிஜிற்றல் ஏற்றுமதிகள் மூலம் மட்டும் இலங்கை ஆண்டுதோறும் 5 பில்லியன் டொலரை ஈட்ட முடியும் என்று டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் டாக்டர் ஹான்ஸ் விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற டிஜிற்றல் பொது உட்கட்டமைப்பின் உச்சி மாநாட்டின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தார்.

டிஜிற்றல் மயமாக்கலை முழுமையாக ஏற்றுக்கொள்வதன் மூலம், அதன் அடிப்படை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும் எனக் குறிப்பிட்டார்.

ஆண்டுதோறும் கூடுதலாக 1-2 வீதம் உயர்வைக் காண முடியும் என்றும், டிஜிற்றல் ஏற்றுமதிகள் இந்த நிலையை எட்டினால், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்த 1-2 வீத அதிகரிப்பு இரட்டிப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், தற்போதைய இலக்கான 200,000 ஐத் தாண்டி இலங்கையின் டிஜிற்றல் பணியாளர்களை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தை விஜயசூரிய வலியுறுத்தினார்.

டிஜிற்றல் பணியாளர்களை 20 வீதமாக அதிகரிப்பது ஆண்டுதோறும் டிஜிற்றல் ஏற்றுமதி வருவாயில் 15 பில்லியன் டொலரை ஈட்ட வழிவகுக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

டிஜிற்றல் முறையில் வணிகம் செய்வதற்கான செலவுகளைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் விஜயசூரிய எடுத்துரைத்தார். (அ)

# அர்ச்சுனா கூறிய கருத்துக்கு பிரதி சபாநாயகர் கண்டனம்

கொழும்பு, பெப். 07

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்றில் நேற்று முன் தினம் வெளியிட்ட கருத்துக்கு பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி தமது கண்டனத்தை வெளியிட்டார்.

நேற்று முன்தினம் சிறப்புரிமை கேள்வியை எழுப்பிய பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, சபாநாயகரும், பாராளுமன்ற நிர்வாகமும் வெட்கமடைய வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று பாராளுமன்றில் கருத்துரைத்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

இதன்போது குறுக்கிட்ட பிரதிச் சபாநாயகரை தமது உரையில் "பாய வேண்டாம்" என எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார். இதனையடுத்து எழுந்த சபை முதல்வர் பிமல் ரத்நா யக்க, பாராளுமன்றில் சபாநாயகருக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் எனவும், எதிர்க் கட்சித் தலைவர் பிரயோகித்த வார்த்தையை மீளப் பெற வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இதற்கு கருத்துரைத்த பிரதிச் சபாநாயகர் ரிஸ்வி சாலி, தமக்கு மதிப்பளிக்காவிட்டாலும் சபாநாயகரின் ஆசனத்துக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் கருத்தும் நேற்று முன்தினம் பாராளுமன்றில் இராமநாதன் அர்ச்சுனா முன்வைத்த கருத்தும், சபாநாயகரை அவமதிக்கும் வகையில் அமைந்திருந்ததாகத் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விசாரணையில் கம்மன்பில செல்வாக்கு செலுத்தக்கூடாது!

## கொழும்பு பேராயரின் பேச்சாளர் வேண்டுகோள்

கொழும்பு, பெப். 07

**தற்போதைய அரசாங்கத்தின் கீழ் ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பு விசாரணைகள் முறையாக நடத்தப்படுவதாகத் தோன்றுவதால், உதய கம்மன்பில உள்ளிட்ட அரசியல்வாதிகள் அந்த விசாரணைகளில் செல்வாக்கு செலுத்த வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொள்கிறார் என்று கொழும்பு பேராயரின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.**



ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக நேற்று முன் தினம் பேராயரின் இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தனது கருத்துக்களைத் தெரிவித்த அருட்தந்தை சிறில் காமினி-ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு ஒரு படுகொலை என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இந்தக் கொலை நடந்ததிலிருந்து, குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒரு குழுவால் இந்த விவகாரம் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் பின்னர் சனல் 4 நிறைய புதிய தகவல்களை வெளியிட்டது. பின்னர் அதைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்குவதைக் கண்டோம். பாராளுமன்ற விவாதங்களின் போது பல புதிய உண்மைகள் வெளிப்பட்டன. ஆனால் விசாரணைகள் முறையாக நடத்தப்படவில்லை.

இப்போது புதிய அரசாங்கத்தின் கீழ் விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன. அரசியல்வாதிகள் அந்த விசாரணைகளில் செல்வாக்கு செலுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு சுதந்திரம் வழங்கப்படும்போது, அவர்கள் தேவையான விசாரணைகளை சுயாதீனமாக மேற்கொள்கிறார்கள்.

அவர்களுக்குத் தேவையான வளங்கள் வழங்கப்பட வேண்டும். சமீப நாட்களாக அரசியல்வாதிகள் விசாரணைகள் குறித்துப் பல்வேறு விடயங்களைப் பேசுவதை நாம் கண்டிருக்கிறோம். இது அரசியல்வாதிகளின் வேலை அல்ல. இதன் உண்மையைக் கண்டறிய வேண்டியவர்கள் பாதிக்கப்பட்டவர்களே.

தேவையான விசாரணைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதுதான் சி.ஐ.டி. அதற்கு ஒரு பங்கு உண்டு. இது அரசியல்வாதிகளின் பங்கு அல்ல.

அரசியல்வாதிகள் தலையிட வேண்டிய அவசியமில்லை. விசாரணையில் செல்வாக்கு செலுத்துவது என்பது குற்றவாளிகள் பற்றிய தகவல்களை மறைக்க முயற்சிப்பதாகும்.

அரசியல்வாதிகள் விசாரணைகளில் செல்வாக்கு செலுத்தவோ அல்லது தலையிடவோ வேண்டாம் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அரசியல்வாதிகள் அல்லது வேறு யாருடைய செல்வாக்கினாலும் விசாரணைகள் நாசப்படுத்தப்படுவதை அனுமதிக்க வேண்டாம் என்று குற்றப் புலனாய்வுத் துறையை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இந்த விசாரணைகள் முடியும் வரை பொறுமையாக இருக்குமாறு கம்மன்பிலவையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இந்த விசாரணைகள் நடைபெறும் வரை நாங்கள் ஐந்து முதல் ஆறு வருடங்களாக பொறுமையாகக் காத்திருக்கிறோம்.

விசாரணைகளுக்குப் பிறகு ஏதேனும் சிக்கல் இருந்தால், அதைப் பற்றி நாங்கள் கேள்விகளைக் கேட்கலாம். புதிய விசாரணைகள் தொடங்கியுள்ளதால், இது மிக விரைவில் முடிவுக்கு வரும் என்று நம்புகிறோம்-என்றார். (அ)

# லசந்தவின் மனைவிக்கு மிகமுக்கியமான பதவி!

கொழும்பு, பெப். 07

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மனைவியை அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தின் இலங்கைக்கான நிரந்திர வதிவிட அலுவலகத்தின் முதன்மைச் செயலாளராக நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.




இதற்கான உத்தியோகபூர்வ நியமனத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மறைவுக்கு பின்னர் அமெரிக்காவில் வசித்து வரும் சோனாலி சமரசிங்கவுடன் குறித்த பதவி தொடர்பில் அரசாங்கம் கலந்துரையாடியுள்ளது.

இதனை ஏற்றுக்கொண்டுள்ள அவர் நியூயோர்க்கில் அமைந்துள்ள இலங்கையின் இராஜதந்திர மையத்தில் முதன்மை ஆலோசகராக கடமைகளை பொறுப்பேற்க உள்ளதாக வெளிவிகார அமைச்சின் முக்கியஸ்தர் மேலும் கூறினார்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இனம் தெரியாத நபர்களினால் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட புலனாய்வு ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை விசாரணைகள் குறித்து தற்போது பரவலாக பேசப்பட்டு வருவதுடன், விசாரணைகளுக்கான அழுத்தங்களும் அதிகரித்துள்ளன.

மறுபுறம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் ஆட்சி வருவதற்கு முன்னர் லசந்த விக்கிரமதுங்க உள்ளிட்ட இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மனைவிக்கு இந்த பதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோட்டா கைது செய்யப்படுவாரென உதய கம்மன்பில ஊகிப்பது எப்படி?

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கேள்வி

கொழும்பு, பெப். 07

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் யாரை எப்போது கைது கைது செய்வது என்பதை விசாரணைகளை முன்னெடுப்பவர்களே தீர்மானிப்பார்கள். இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்படுவார் என்பதை கம்மன்பில முன்கூட்டியே ஊகித்திருக்கின்றார் என்றால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் அவர் முன்னரே அறிந்திருக்கக் கூடும் என்று தோன்றுகிறது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய கைது செய்யப்படுவாரா என்பது எமக்குத் தெரியாது.

அது விசாரணைகளை முன்னெடுது சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவினரின் கடமை யாகும். அவை அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுபவையல்ல.

விசாரணை முன்னெடுக்கும் திணைக்களங்கள் கூறினால் மாத்திரமே நாமும் அறிவோம். எனவே யார் எப்போது கைது செய்யப்படுவார் என்பது எமக்குத் தெரியாது.

அவ்வாறிருகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய கைது செய்யப்படுவார் என்பதை கம்மன்பில எவ்வாறு அறிவார் என்பதும் எமக்கு தெரியாது.

ஒருவேளை அவருக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் அனைத்தும் தெரிந்திருக்கலாம். அதனால் தான் யார் கைது செய்யப்படபோகின்றார்கள் என்பதை முன் கூட்டியே கூறுகின்றார்-என்றார். (அ)

# ஆசாத் மௌலானாவின் குற்றச்சாட்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ள அரசு

கொழும்பு, பெப். 07

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் குறித்து அவரது செயலாளர்களில் ஒருவரான ஆசாத் மௌலானா சனல்-4 தொலைக்காட்சிக்கு தெரிவித்த குற்றச்சாட்டுகள் குறித்து பாதுகாப்புத் தரப்பினர் விசாரணைகள் ஆரம்பித்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ள பாதுகாப்பு அதிகாரியொருவர் இதனை தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் சிறைத்தண்டனையை அனுபவித்தவேளை பிள்ளையான் சிறையிலிருந்தவாறே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான திட்டமிடலில் ஈடுபட்டார் என ஆசாத் மௌலானா சனல் 4 க்கு தெரிவித்தார் என அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

மௌலானா ஏற்கனவே இது குறித்த விவரங்களை சனல் 4 இற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் தெரிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகள் தொடரும் அதேவேளை, தேசிய புலனாய்வுப் பிரிவுக்காக பணியாற்றிய முன்னாள் உயரதிகாரிகள் சிலருக்கு நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் குறித்து குற்றச்சாட்டுகளை முன்வைத்த அவரது செயலாளர்களில் ஒருவரான ஆசாத் மௌலானாவுடன் தொடர்பில் உள்ளதாக தெரிவித்துள்ள இந்த அதிகாரிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் சிறைத்தண்டயை அனுபவித்தவேளை பிள்ளையான் சிறையிலிருந்தவாறே உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கான திட்டமிடலில் ஈடுபட்டார் என ஆசாத் மௌலானா ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சிக்கும் தெரிவித்துள்ளார் என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆசாத் மௌலானா முன்வைத்த குற்றச்சாட்டுகளை தொடர்ந்து சி.ஐ.டியினர் பல தடவை பிள்ளையானை விசாரணை செய்துள்ளதாக தெரிவித்துள்ள சிஐடியினர், இந்த சதி முயற்சியில் தொடர்புபட்டுள்ளவர்களை விசாரணை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராராசிங்கம் கொலை தொடர்பில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்த வேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்காக சஹ்ரான் குழுவினரின் உதவியை பெறுவதற்கு பிள்ளையான் உதவினார் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# நெல்லைக் கொள்வனவு செய்ய அரச களஞ்சியசாலைகள் திறப்பு

கொழும்பு, பெப். 07

நெல் கொள்வனவை முன்னிட்டு நேற்று முதல் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அறுவடை இடம்பெறும் கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்த களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் மஞ்சுள பின்னலந்த குறிப்பிட்டார். நெல் கொள்வனவுக்காக திறைசேரியில் இருந்து 5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையினூடாக நெல்லுக்கான நிர்ணய விலைகள் நேற்று முன் தினம் அறிவிக்கப்பட்டன.

அதற்கமைய, ஒரு கிலோகிராம் நாட்டரிசி நெல் 120 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் சம்பா நெல் 125 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் கீரி சம்பா நெல் 132 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்திருந்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பு முத்திரையிட்ட கொள்கலன்களை பரிசோதனையில்லாது விடுவித்தவர் யார்?

## சபையில் சஜித் பிரேமதாஸ கேள்வி

கொழும்பு, பெப். 07

**தொடர்ச்சியாக கொள்கலன் பரிசோதனை நடவடிக்கைகளில் ஏற்படும் நெரிசலுக்கு மத்தியில், சுங்கப் பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் 323 கொள்கலன்கள் தொடர்பில் நாட்டில் பேச்சு இடம்பெற்று வருகின்றவேளையில், இது தொடர்பில் நாட்டுக்கு உண்மைகளை வெளிப்படுத்த துறைக்குப் பொறுப்பான அமைச்சராக இருக்கும் தற்போதைய ஜனாதிபதி இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.**

நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்தில் காணப்படும் கொள்கலன் பரிசோதனை நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதம் ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி மூலம் அதிக வருமானம் ஈட்டும் எம்மைப் போன்ற நாட்டிற்கு நல்லதல்ல. இது தொடர்பில், பரிசோதிக்கப்படாமல் வெளியிடப்பட்ட 'கட்டாயம் பரிசோ தனைக்குட்படுத்த வேண்டும் என சிவப்பு முத்திரை' பொறிக்கப்பட்ட 323 கொள்கலன்களை விடுவித்தமையை யார் பொறுப்பேற்பது? ஏன் அவ்வாறு விடுவிக்கப்பட்டன என்றும் அரசாங்கத்திடம் அவர் கேள்வி எழுப்பினார்.

அவ்வாறே, கொழும்பு துறைமுகத்தில் நாளொன்றுக்கு பெறப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கை, தற்போது காணப்படும் கொள்கலன் பரிசோதனை ஆய்வு வசதிகளால் ஒரு நாளைக்கு பரிசோதிக்கப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கை, இந்த பரிசோதனை நடவடிக்கைகளை தொடர்ந்து பேணிச் செல்ல முடியுமா? இலங்கையில் கொள்கலன்களை விரைவாக பரிசோதனை செய்து விடுவிப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து எதிர்க் கட்சித் தலைவர் பிரஸ்தாபித்தார்.

அத்துடன், கடந்த மாதம் கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்கள் விடுவிக்கப்படுவதில் ஏற்பட்ட பாரிய நெரிசல் மற்றும் காலதாமதத்தினால் திருப்பியனுப்பப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை மற்றும் அதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

இந்த கொள்கலன்களில் உள்ள பொருட்கள் என்ன? அவற்றை சபைக்கு சமர்ப்பியுங்கள் என்றும், அவை சட்டவிரோதமானவை அல்லது மனித நுகர்வுக்கு தகுதியற்றவை அல்ல என்று பரிசோதனை மேற்கொள்ளாமல் முடிவு செய்தவர்கள் மற்றும் அவற்றை இறக்குமதி செய்தவர்கள் யார் என்பதையும் சபைக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும், இந்த விவகாரம் தொடர்பில் யார் முழுப்பொறுப்பெடுப்பது? என்றும் கேள்வி எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். (அ)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு அவசியம்!

## சிறீதரன் எம்.பி. வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 07

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈட்டைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று நிலையியற் கட்டளைச் சட்டம் 27-2 இன் கீழ், அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

சிறிதரனின் கோரிக்கைக்கு பதில் வழங்கிய விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த, சிறீதரன் எம்.பி.யின் கோரிக்கை நியாயமானது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

# சுஜீவவுக்கு 250 மில்லியன் ரூபா நட்டஈடாக செலுத்தவேண்டும்!

## சி.பி.ரத்நாயக்கவுக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, பெப். 07

அபகீர்த்தி ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவுக்கு 250 மில்லியன் ரூபாயை நட்டஈடாக செலுத்துமாறு பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.பி ரத்னாயக்கவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தரவை கல்கிசை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற நேர்காணலின் போது முன்னாள் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க, மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த கருத்து மூலம் தமக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாக கூறி பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க வழக்கு தொடர்ந்திருந்தார்.

வழக்கு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரச இலட்சினைகள் பயன்படுத்தி மோசடி

கொழும்பு, பெப். 07

அரசாங்க நிறுவனங்களின் இலட்சினைகளைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் போலியான விளம்பரங்களைப் பரப்பி தனிப்பட்ட தகவல்களைத் திருடும் மோசடி குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த சில நாட்களாக இவ்வாறான பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி, தனது இலச்சினையைப் பயன்படுத்தி மோசடியான விளம்பரம் ஒன்று சமூக ஊடகங்களில் இந்த நாட்களில் பரப்பப்பட்டு வருவதாக அறிவித்துள்ளது.

தொழில் வாய்ப்புகளை வழங்குவதாக கூறி அதற்கான விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அது போலியான விளம்பரம் எனவும் இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், சிறிலங்கன் எயார் லைன்ஸின் இலச்சினையைப் பயன்படுத்தி இதேபோன்ற வேலை வெற்றிட விளம்பரங்கள் அண்மைய நாட்களில் வெளியிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அரசாங்க இலச்சினைகளை பயன்படுத்தி வெளியிடப்படும் போலி விளம்பரங்களுக்கு இவ்வாறு பதிலளிப்பது பொருத்தமற்றது என இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல குறிப்பிட்டார்.

போலி இணையதளங்கள், தேசிய அடையாள அட்டைகளின் நகல், கடவுச்சீட்டு நகல்கள், பிறப்புச் சான்றிதழ்கள் போன்ற உங்களின் தனிப்பட்ட தரவுகளின் நகல் போன்ற தனிப்பட்ட தகவல்களை அடிக்கடி திருடுகின்றன.

இதுபோன்ற இணையதளங்களுக்குச் சென்று உங்கள் தனிப்பட்ட தகவல்களை எந்தச் சூழ்நிலையிலும் வழங்க வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார். (அ)

# பெண் பொலிஸ் அலுவலருக்குப் பாலியல் தொந்தரவு செய்த பொறுப்பதிகாரி கைது

கொழும்பு, பெப். 07

மெதிரிகிரிய பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டின் பேரில், மெதிரிகிரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கொழும்பு குழந்தைகள் மற்றும் மகளிர் பணியகத்தினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் பொலனறுவை, குருப்பு சந்தியைச் சேர்ந்த ஒரு பொலிஸ் பரிசோதகர் ஆவார். அவர் மெதிரிகிரிய தலைமையகத்தில் பொலிஸ் பரிசோதகராக பணியாற்றி வந்தார்.

மெதிரிகிரிய பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் 12.10.2024 அன்று அளித்த முறைப்பாட்டின் பேரில், பெண்கள் மற்றும் குழந்தைகள் பணியகத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் திருமதி ரேணுகா பால சூரிய வின் உத்தரவின் பேரில் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டார். (அ)

# வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 07

எல்பிட்டிய பிரதேச குற்றத் தடுப்புப் பிரிவினரால் கொஸ்கொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வதுரவெல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் ஹெரோயின் ஆகியவற்றை வைத்திருந்த 34 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று இந்தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சோதனையின் போது, 5.34 கிராம் ஹெரோயின், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 9 எம்.எம் பிஸ்டல், ஒன்பது 9 எம்.எம் துப்பாக்கி ரவைகள் மற்றும் ஒரு மகசீன் ஆகியவற்றை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர் மேலதிக நடவடிக்கைகளுக்காக கொஸ்கொட பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பச்சை மிளகாய் ரூ. 1200!

கொழும்பு, பெப். 07

கடந்த காலங்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக சந்தையில் காய்கறிகளின் விலைகள் உயர்வடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தவகையில் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாயின் விலை ரூ.1200 முதல் 1,400 ரூபாவாகவும், ஒரு கிலோ கறி மிளகாயின் விலை 1000 ரூபாவாகவும் அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை மிளகாய் விலை அதிகரிப்பால், மிளகாய் விற்பனையும் கடுமையாகக் குறைந்துள்ளதாகவும், இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். (அ

# ஜனாதிபதி அநுரகுமார 10 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியம் செல்கிறார்

கொழும்பு, பெப். 07

2025 ஆம் ஆண்டு உலக அரசுகள் உச்சி மாநாடில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயீத் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொள்வதாக அந்த அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. (அ)

# மகிந்தவின் அடிப்படை உரிமை மனுவை பரிசீலிக்கத் தீர்மானம்

கொழும்பு, பெப். 07

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நீக்கப்பட்ட பாதுகாப்புப் பிரிவை மீண்டும் பணியில் அமர்த்தக் கோரி அவரது வழக்கறிஞர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை மார்ச் 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு நேற்று நீதிபதிகளான பிரீதி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போக நெற் செய்கை திருகோணமலையில் வீழ்ச்சி

## அரசாங்கத்திடம் விவசாயிகள் அவசர கோரிக்கை

திருகோணமலை, பெப்.07

**திருகோணமலை மாவட்டத்தில் கனமழை, குளங்களின் வான் கதவுகள் திறப்பு உள்ளிட்ட காரணங்களால் பெரும்போக நெற் செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**



தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவிற்குட்ட பகுதியில் தற்போது பெரும்போக நெற் செய்கை அறுவடை நடைபெற்று வருகின்றது.

குறித்த பகுதியில் சுமார் 400 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்பார்த்த நெல்லுக்கான நிர்ணய விலை கிடைக்காமை, வெட்டுக் கூலி அதிகம் என பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தார்.

தற்போது ஓர் ஏக்கருக்கு 15, 000 ரூபாய் வரை இயந்திர கூலி செலவாகிறது. விவசாயிகளுக்கு நன்மையான விடயங்களை பெற்றுத்தர வேண்டும்.

அப்போது தான் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அரசாங்கம் எங்களைப் பாது காக்க வேண் டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# கிழக்கு பிரதம செயலாளர் கடமையை பொறுப்பேற்பு

திருகோணமலை, பெப்.07

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட ரி. ஏ. சி. என். தலங்கம நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

திருகோணமலை வரோதயர் நகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண பிரதம செயலாளர், செயலகத்தில் மிக எளிமைமையான இந்த நிகழ்வு நடைபெற்றது.இவர் இதற்கு முன்னதாக மீன்பிடி அமைச்சின் மேலதிகச் செயலாளராக கடமையாற்றியிருந்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவால் கடந்த மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து இவருக்கான நியமனக் கடிதம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றுக் காலை பிரதம செயலாளராக தலங்கம தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். (எ)



# அதிபருக்கு கௌரவிப்பு



நாவிதன்வெளி, பெப்.07

அம்பாறை, நாவிதன்வெளி அல் ஹிக்மா வித்தியாலய அதிபர் எம். ரி. அப்துல் சத்தாரின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலையின் மேம்பாட்டு இணைப்பாளர் ஏ. எச். எம். சவாகிர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப் பணிப்பாளர் சட்டத்தரணி சி. எம். ஹலீம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு, அதிபருக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார். (எ)

# சுகாதார நிறுவன செயல்திறனை மேம்படுத்த விசேட செயலமர்வு

கல்முனை, பெப்.07

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துதல் தொடர்பான செயலமர்வு பிராந்திய பணிமனையின் கேட்போர் கூடத்தில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். சி. எம். மாஹிர் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகாதார பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.




இந்தச் செயலமர்வில் ஆதார மருத்துவமனைகளின் அத்தியட்சகர்கள், பிராந்திய பிரிவு தலைவர்கள், பிரதேச மருத்துவமனைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கால தாமதங்களைக் கண்டறிதல், செயல்திறனை மேம்படுத்துதல், வீண் விரயத்தை குறைத்தல், முறையான மேற்பார்வையை உறுதி செய்தல், எதிர்காலத் திட்டமிடல் நடவடிக்கைகளின் நிர்வாகத்தை மேம்படுத்துதல் போன்ற பொதுப் பிரச்னைகளைப் பற்றி இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன் சில மருத்துவமனைகளுக்கு அலுவலக இலத்திரனியல் உபகரணங்களும் பிராந்திய பணிப்பாளரால் வழங்கப்பட்டன. (எ)

# சிறுவர் கழகங்களின் ஒன்றுகூடல்

சாய்ந்தமருது, பெப்.07

77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்ட சமுர்த்தி சிறுவர் கழகங்களின் மாபெரும் ஒன்றுகூடலும் சுதந்திர தின நிகழ்வும் கடந்த 4 ஆம் திகதி சாய்ந்தமருது பௌசி கடற்கரை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், அம்பாறை மாவட்ட சமுர்த்தி காரியாலயம் மற்றும் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி சங்கம் என்பனவற்றின் ஏற்பாட்டில் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் நியாத் ஏ. மஜீத் மற்றும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ. எல். ஜபர் ஆகியோரின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.



இந்த நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதில், மாவட்டத்தின் 20 பிரதேச செயலகங்களிலிருந்து 400இற்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் சிறுவர்களின் பங்குபற்றலுடன் கலை, கலாசார, பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

எதிர்காலச் சந்ததியினர் இடையே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே இந்த நிகழ்வின் நோக்கமாகும்.(எ)



திருகோணமலை க்ரீன்விச் சர்வதேச பாடசாலையில் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் என்ற நாடே இருக்காது முற்றாக அழித்து ஒழிக்கப்படும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடும் எச்சரிக்கை

வாஷிங்டன், பெப்.07

**ஈரான் என்ற நாடே இருக்காது. அவர்கள் முற்றாக அழிக்கப்படுவார்கள். எதுவும் மிச்சமிருக்காது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



ஈரான் மீது அதிகப்படியான அழுத்தம் கொடுக்கும் உத்தரவுகளில் ட்ரம்ப் கையெழுத்திட்டார். அப்போது, செய்தியாளர்களை சந்தித்த அவர் "ஈரான் என்னைக் கொன்றால் அதை அழிக்க வேண்டும்" என்று ஆலோசகர்களுக்கு அறிவுறுத்தலை வழங்கப்பட்டதாகவும் கூறினார். (ஏ)

# பாலியல் வன்முறையின் பின்னர் 100 பெண்கள் உயிருடன் எரிப்பு!

பிராசாவில், பெப்.07


கொங்கோவின் கோமா நகர சிறைச்சாலையில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்முறையின் பின்னர் உயிருடன் எரிக்கப்பட்டனர் என அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

ருவாண்டா ஆதரவு கிளர்ச்சியார்கள் கொங்கோவின் கோமா நகரத்துக்குள் நுழைந்ததை தொடர்ந்து பெரும் குழப்பம் நிலவியவேளை கோமா நகரின் சிறைச்சாலையில் 100இற்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்முறையின் பின்னர் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

கோமாவின் முன்ஜென்ஸ் சிறைச்சாலையிலிருந்து கைதிகள் தப்பிச்செல்ல முயன்ற வேளை பெண் கைதிகளை தாக்கினர் என ஐ. நா. அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அந்த சிறையிலிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் தப்பிச்சென்றனர். அவர்கள் பெண் கைதிகளின் பகுதிக்கு தீ மூட்டினர் என கோமாவில் உள்ள ஐ.நா. அமைதிப் படையின் பிரதித் தலைவர் தெரிவித்துள்ளார். (ஏ)

# சீனா மற்றும் பாகிஸ்தான் ஜனாதிபதிகள் சந்திப்பு



பீஜிங், பெப்.07

சீனாவின் ஹார்பின் நகரில் நடைபெற்று வரும் 9ஆவது ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வருமாறு தனது நட்பு நாடுகளின் தலைவர்கள் பலருக்கும் சீனா அழைப்பு விடுத்துள்ளது. அவர்களில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியும் ஒருவர்.

இதன்படி சீனா விடுத்த அழைப்பை ஏற்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி 5 நாள் பயணமாக சீனா சென்றார். தலைநகர் பீஜிங்கில் சீன ஜனாதிபதி ஜின்பிங்கை சந்தித்து பேசினார். இதன்போது, இருநாடுகளுக்கும் இடையேயான உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இருவரும் தீவிரமாக ஆலோசித்தனர். (ஏ)

# சூகியின் வீட்டை ஏலம் விட்ட மியன்மார் அரசுக்கு ஏமாற்றம்

நேபிடாவ், பெப்.07

மியன்மாரில் சிறை வைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகியின் வீட்டை அந்த நாட்டு அரசாங்கம் ஏலம் விட்டது. இருப்பினும், அந்த வீட்டை யாரும் வாங்க முன்வராததால் ஏமாற்றம் அடைந்துள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக சிறையில் இருந்து போராடியவர் ஆங் சான் சூகி. இதற்காக அமைதிக்கான நோபல் பரிசு பெற்றிருந்தார். இவருடைய தொடர் போராட்டம் காரணமாக அங்கு இராணுவ ஆட்சி கலைக்கப்பட்டது. தொடர்ந்து 2015 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ஆங் சான் சூகி வெற்றி பெற்று அந்த நாட்டின் தலைவராக பதவியேற்றார். தொடர்ந்து 2020ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்லில் 81



சதவீத வாக்குகளை பெற்று மீண்டும் ஆட்சி அமைத்தார். 2021ஆம் ஆண்டு அந்த நாடு மீண்டும் இராணுவ ஆட்சிக்குள் கொண்வரப்பட்டது. ஆங் சான் சூகி மீது ஊழல் குற்றச்சாட்டு வழக்குப்பதிவு செய்யப்பட்டு 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சிறையில் உள்ள ஆங் சான் சூகியை விடுதலை செய்யக் கோரி அங்கு பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அவர்கள் மீது அந்த நாட்டின் இராணுவம் கோர முகத்தை காட்டி அடக்கி வருகிறது. மியன்மாரில் கடுமையான நிதி நெருக்கடி நிலவி வரும் நிலையில் ஆங் சான் சூகிக்கு சொந்தமான சொத்துகளை இராணுவம் விற்று பொருளாதார இழப்பை சரிகட்டி வருகிறது. இராணுவ நெருக்கடி நிலையின் போது ஆங் சான் சூகி அடைக்கப்பட்டிருந்த வீடு கையகப்படுத்தப்பட்டது.

மேலும், அதனை ஏலம் விட இராணு வம் நடவடிக்கை எடுத்தது. ஆனால், ஏலம் விடப்பட்ட அந்த வீட்டை யாரும் வாங்க முன்வரவில்லை.

இதனால், இராணுவ அரசுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. ஆங் சான் சூகியின் வீட்டை ஏலம் விட மூன்றாவது முறையாக இராணுவ அரசு முயற்சித்தது. (ஏ)

# "காஸாவை முழுமையாக நாங்கள் கைப்பற்றுவோம்"

## அமெரிக்கா - இஸ்ரேல் உறுதி


வாஷிங்டன், பெப்.07

காஸாவை முழுமையாக கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம் என்று அமெரிக்காவும் இஸ்ரேலும் உறுதிபடத் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்தின் காஸா நகரை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் போர் ஏற்பட்டது. 15 மாதங்களுக்கும் மேலாக நீடித்து வந்த போரை முடிவுக்கு கொண்டுவர கட்டார் உள்ளிட்ட நாடுகள் முயற்சி மேற்கொண்டன. நீண்ட முயற்சிக்கு பின்னர் போர் முடிவுக்கு வந்தது.

இரு தரப்பும் போர் நிறுத்தத்தில் கையெழுத்திட்ட நிலையில், கடந்த மாதம் முதல் தாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், காஸாவில் மெல்ல அமைதி திரும்பி வருகிறது.

இந்தச் சூழலில் அமெரிக்காவுக்கு வருமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்திருந்தார். இதை ஏற்று, நெதன்யாகு அமெரிக்கா சென்றிருந்தார். இதனைத்தொடர்ந்து வெள்ளை மாளிகையில், நெதன்யாகு - ட்ரம்புடன் சந்தித்து பேசினர்.



இந்தச் சந்திப்புக்கு பிறகு, வெள்ளை மாளிகையில் ட்ரம்பும், நெதன்யாகுவும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது, ட்ரம்ப் கூறுகையில், "காஸா பகுதியை அமெரிக்கா கைப்பற்றும். அமெரிக்க படைகளை பயன்படுத்தவும் சாத்தியம் உள்ளது. காஸா பகுதியில் உள்ள ஆபத்தான வெடிகுண்டுகள், ஆயுதங்களை அகற்றுவோம். சேதமடைந்த கட்டடங்களை அகற்றி வளர்ச்சி பணிகளை உருவாக்குவோம். இதற்கு நாங்கள் பொறுப்பு.

பொருளாதாரத்தை மேம்படுத்தி அந்த பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வீட்டு வசதி உள்ளிட்டவற்றை செய்து கொடுப்போம். தற்போது ஏற்பட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் மூலமாக அப்பகுதியில் அமைதியை நிலை நாட்டுவோம்"- என்று கூறினார். நெதன்யாகு கூறுகையில், " ட்ரம்பின் யோசனை வரலாற்றை மாற்றக்கூடிய ஒன்றாகும். மத்திய கிழக்கின் புவிசார் அரசியலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். இஸ்ரேல் ஒருபோதும் வலுவாக இருந்தது இல்லை. ஈரானின் பயங்கரவாத அச்சுறுத்தலும் பலவீனமாக இல்லை.

எனினும், எங்கள் பிராந்தியத்தில் அமை தியை கொண்டு வருவது பற்றி யும் எதிர்காலம் குறித்தும் ஆலோசித்தோம். காஸாவில் இஸ்ரேலுக்கு மூன்று இலக்குகள் உள்ளன.

ஹமாஸின் இரா ணுவத்தை அழிப்பது, நிர்வாகக் கட்டமைப்பை சீர்குலைப்பது, எங்கள் அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிப்பது ஆகியவை உள்ளன - என்றார். (ஏ)

# பங்களாதேஷில் மீண்டும் வெடித்தது வன்முறை!

## ஷேக் முஜிபுர் ரகுமான் வீடு சூறை



டாக்கா, பெப்.07

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் தந்தையின் நினைவு இல்லத்துக்கு வன்முறையாளர்களால் தீ வைக்கப்பட்டது.

பங்களாதேஷில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் 5 ஆம் திகதி மாணவர்கள் போராட்டத்தில் மிகப்பெரிய வன்முறை வெடித்ததன் எதிரொலியாக பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இதனைத் தொடர்ந்து பங்களாதேஷ் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, இராணுவத்தின் கண்காணிப்பில் அங்கு இடைக்கால தலைவராக முகமது யூனுஸ் பொறுப்பேற்றார். இந்த நிலையில், அவாமி லீக்கின் தற்போது கலைக்கப்பட்ட மாணவர் பிரிவான சத்ரா லீக், ஷேக் ஹசீனா நேரலை வாயிலாக உரை நிகழ்த்த ஏற்பாடு செய்தி ருந்தது. இதன்படி நேற்று முன்தினம் இரவு ஷேக் ஹசீனா உரையாற்றுவார் என அறிவிக் கப்பட்டது. தற்போதைய ஆட் சிக்கு எதிராக ஒரு எதிர்ப்பை பதிவு செய்ய நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுப்பதாக தகவல் பரவியது.

இதனால், போராட்டக்காரர்கள் டாக்காவில் உள்ள முஜிபுர் ரகுமான் நினைவு இல்லத்தை சேதப்படுத்தி தீ வைத்தனர்.

பல போராட்டக்காரர்கள் வீட்டின் இரண்டாவது மாடியில் ஏறி, ஷேக் முஜிபுர் ரகுமானின் உரு வப்படத்தை சேதப்படுத்தினர். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# 2ஆவது டெஸ்ட் போட்டியிலும் இலங்கை அணி தடுமாற்றம்!



காலி, பெப்.07

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இலங்கை அணி தடுமாறி வருகிறது. காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி 144 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை பறிகொடுத்துள்ளது. தினேஸ் சந்திமால் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களை எடுத்திருந்தார். ஏனையவர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் நேதன் லயன் 3 விக்கெட்களை வீழ்த்தினார். இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்றமை குறிப்பிடத் தக்கது. (எ)

ரி - 20 கிரிக்கெட் போட்டியில்

## அதிக விக்கெட்கள் வீழ்த்தி ரஷித் கான் புதிய சாதனை



கேப்டவுன், பெப்.07

சகல விதமான ரி - 20 கிரிக்கெட் போட்டிகளிலும் அதிக விக்கெட்களை வீழ்த்தியவர் என்ற சாதனையை ஆப்கானிஸ்தானின் சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் நிலைநாட்டியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் தற்போது நடைபெற்று வரும் ரி - 20 கிரிக்கெட் தொடரில் மும்பை இந்தியன்ஸ்-கேப்டவுன் அணிக்காக விளையாடிவரும் ரஷித் கான், பார்ல் றோயல்ஸ் அணி வீரர் துனித் வெல்லாலகேயை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் 632 ஆவது ரி - 20 விக்கெட்டைக் கைப்பற்றி புதிய சாதனையை நிலைநாட்டினார்.

இதன்மூலம், மேற்கு இந்திய தீவுகளின் ட்வேன் பிராவோவுக்கு இதுவரை சொந்தமாக இருந்த 632 ரி - 20 விக்கெட்கள் என்ற சாதனை ரஷித் கானால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு மகத்தான சாதனை எனவும் இதனையிட்டு பெரு மகிழ்ச்சி அடைவதாகவும் ரஷித் கான் தெரிவித்தார். பத்து வருடங்களுக்கு முன்னர் யாராவது ரி - 20 போட்டியில் பந்து வீச்சில் சாதனை படைப்பீர்களா என்று என்னிடம் கேட்டிருந்தால், நான் அப்படி நினைக்கவில்லை என்றுதான் கூறியிருப்பேன் என்றும் ரஷித் கான் தெரிவித்தார். (எ)

## பாகிஸ்தான் செல்ல இந்திய நடுவர் மறுப்பு

டுபாய், பெப்.07


இந்தியாவின் முன்னணி நடுவர் நித்தின் மேனன் பாகிஸ்தான் செல்ல மறுத்துள்ளார். 9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. "ஏ" பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிகளும், "பி" பிரிவில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம் பெற்றுள்ளன.

இந்த நிலையில், 15 பேர் கொண்ட நடுவர் குழுவை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) நேற்று முன்தினம் அறிவித்தது. இதில் 3 போட்டி நடுவர்கள் மற்றும் 12 களநடுவர்கள் இடம்பிடித்துள்ளனர். நடுவர் குழுவில் இந்தியாவின் முன்னணி நடுவர் நித்தின் மேனன் இடம் பெற வேண்டும் என ஐ. சி. சி. விரும்பியது.

இந்த நிலையில், தனிப்பட்ட காரணங்களுக்காக பாகிஸ்தான் பயணிப்பதில்லை என முடிவு செய்திருப்பதாக நித்தின் மேனன் ஐ. சி. சியிடம் கூறியுள்ளார். அவரது இந்த முடிவை ஐ. சி. சியும் ஏற்றுக் கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)



## ஆஸி. நட்சத்திர வீரர் ஸ்ரொய்னிஸ் ஓய்வு




மெல்பேர்ன், பெப்.07

அவுஸ்திரேலிய அணியின் நட்சத்திர வீரர் மார்கஸ் ஸ்ரொய்னிஸ் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்துள்ளார். எதிர்வரும் 19ஆம் திகதி தொடங்கவுள்ள சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் இடம் பெற்றிருந்த நிலையில் ஸ்ரொய்னிஸ் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஸ்ரொய்னிஸ் 71 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 1, 495 ஓட்டங்களை எடுத்துள்ளார். மேலும், 48 விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார்.

ஓய்வு தொடர்பில் ஸ்ரொய்னிஸ் கூறியவை வருமாறு, "அவுஸ்திரேலியாவுக்காக ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடியது ஒரு நம்பமுடியாத பயணமாகும். நான் பெற்ற ஒவ்வொரு தருணத்துக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இது எளிதான முடிவு அல்ல, எனது வாழ்க்கையின் அடுத்த அத்தியாயத்தில் முழுமையாக கவனம் செலுத்த இது சரியான நேரம் என்று நம்புகிறேன்"- என்றார். (எ)

## சம்பியன்ஸ் கிண்ண அணியில் ஜடேஜா ஏன்?

### பத்ரிநாத் கேள்வி

சென்னை, பெப்.07

சம்பியன்ஸ் கிண்ண தொடரில் பங்கேற்கும் இந்திய அணியில் ரவீந்திர ஜடேஜாவை தெரிவு செய்தது ஆச்சரியமளிக்கிறது என்றும் அவர் தேவையே இல்லை என்றும் தமிழகத்தை சேர்ந்த முன்னாள் இந்திய வீரர் சுப்பிரமணியம் பத்ரிநாத் தெரிவித்துள்ளார்.

வருண் சக்கரவர்த்தியும் அணியில் தற்போது சேர்க்கப்பட்டுள்ளார். அக்சர் படேல், குல்தீப் யாதவ் என்று ஏற்கனவே இரண்டு இடது கை சுழற் பந்து வீச்சாளர்கள் இருக்கும் போது ரவீந்திர ஜடேஜாவை அணியில் சேர்த்திருப்பது தேவையற்றது என்றும் அவர் கூறினார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த போதே பத்ரிநாத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

## அபிஷேக் சர்மா இரண்டாம் இடம்



டுபாய், பெப்.07

சர்வதேச ரி - 20 கிரிக்கெட் தரவரிசையில் இந்திய அணியின் தொடக்க வீரர் அபிஷேக் சர்மா 38 இடங்கள் முன்னேறி 2ஆம் இடம் பிடித்துள்ளார். அண்மையில் நடைபெற்று முடிந்த இங்கிலாந்து அணிக்கு எதிரான ரி - 20 கிரிக்கெட் தொடரின் கடைசி ஆட்டத்தில், அபிஷேக் சர்மா அதிரடியாக விளையாடி சதம் விளாசினார்.

இந்தத் தொடரில் இந்திய அணி 4 - 1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இந்த நிலையில், ரி - 20 கிரிக்கெட் வீரர்கள் தரவரிசையை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) வெளியிட்டுள்ளது. இதில், அபிஷேக் சர்மா 38 இடங்கள் முன்னேறி 2ஆம் இடத்தை பிடித்துள்ளார். அவர் 829 புள்ளிகள் எடுத்துள்ளார். முதலிடத்தில் அவுஸ்திரேலிய வீரர் ட்ராவிஸ் ஹெட் 855 புள்ளிகளுடன் உள்ளார். (எ)

## மயங்க் யாதவ் மீது ஜாகீர் கான் நம்பிக்கை




மும்பை, பெப்.07

மணிக்கு 154 கிலோ மீற்றர் வேகம் வரை வீசக்கூடிய ஐ. பி. எல். கண்டுப்பிடிப்பான மயங்க் யாதவ், 2025 ஐ. பி.எல். சீசனிலிருந்து அப்படியே இந்திய அணி வரை நீண்ட தூரம் இடைவெளி இல்லாமல் செல்ல வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஜாகீர் கான் விருப்பம் தெரிவித்துள்ளார்.

லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் மற்றும் ஆலோசகர் ஜாகீர் கான் இருவரும் எதிர்வரும் ஐ.பி.எல். தொடரில் மயங்க் யாதவின் பங்கு அணியின் ஆட்டத்தைத் தீர்மானிக்கும் என்று நம்புகின்றனர்.

ஓர் இளம் வேகப்பந்து வீச்சாளரை நீண்ட காலம் ஆடுமாறு காப்பது அவசியம் என்று ஜாகீர் கான் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியுடன் பயனுள்ள வகையில் பேசியுள்ளதாகவும் அவர் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸாத்...

ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வி யில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் பிள்ளையானின் முன்னாள் இணைப்புச் செயலாளர் ஆஸாத் மௌலானா, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர் பாக அளித்த அறிக்கையின் அடிப் படையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விசாரணையின் முக்கிய சாட்சியான ஆஸாத் மௌலானா, விரைவில் சுவிற்சர்லாந்திலிருந்து அழைத்து வரப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காக, கோட்டாபய தன்னுடனும் முன்னாள் அரச புலனாய்வுச் சேவைப் பணிப்பாளர் சுரேஷ் சாலே பிள்ளையானுடனும் இணைந்து செயற்பட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தையிட்டி...

இணைக்கப்பாடு எட்டப் பட்டுள்ள தாக அறிகிறோம். குறித்த கூட்டத்துக்கு விகாரைக்கு பொறுப் பான விகாராதிபதியையோ விகாரை நிர்வாகத்தினரையோ அழைத்திருக்கவில்லை.எனவே அந்த இணைக்கப்பாட்டை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது.

விகாரை அமைக்கப்பட்டுள்ள 07 ஏக்கர் காணி , அதனைச் சூழவுள்ள காணி என 14 ஏக்கர் காணியையும் விகாரைக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாறாக விகாரைக்குச் சொந்தமான காணிகளை பொது மக்களுக்கு வழங்க முடியாது.

விகாரைக்கு உரிய காணியில் பௌத்த சமய முன்னேற்றத்துக்கான சைத்யம் , புத்த மெதுரா, போதி, அன்னதான மடம், மடாலயம் , ஓய்வு மண்டப வசதிகள் , தியான மண்டபங்கள் , பூங்கா போன்றவை அமைக்கப்பட வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் - என குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. (அ)

## யாழில்...

நாட்களின் பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதன்போது மாவட்ட அரசாங்க அதிபர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைவர், செயலாளர் ஆகியோரின் பங்களிப்புடன் இது குறித்து கலந்துரையாடல் இடம்பெற்றது.

தையிட்டியில் விகாரை கட்டப்பட்ட இடம் தனியாருக்குச் சொந்தமானது என அதன்போது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த விடயம் 2024 டிசெம்பர் 13 ஆம் திகதி இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டது.

அதேபோன்று 2025 ஜனவரி 31 ஆம் திகதி மீண்டும் பேசப்பட்டது. அந்தக் கூட்டத்துக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமை தாங்கினார்.

தையிட்டியில் விகாரை அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

இந்நிலையில் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் என்ற அமைப்பு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. அந்தக் காணியில் தேவநம்பியதீசன் காலத்தில் விகாரை அமைக்கப்பட்டதென்றும் 14 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டதென்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் எந்தவொரு காரணத்துக்காகவும் காணியை மீள கையளிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் காணி என வெளிப்படையாகத் தெரிந்தும் இவ்வாறு நடந்து கொள்ள முடியாது. இராணுவத்தினர் என்பதற்காக சட்டத்தை கையில் எடுப்பதற்கு அனுமதிக்க முடியாது - என்றார். (அ)

## குற்றவாளிகள்...

நபர்களுக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த மரண தண்டனைக்கு எதிராகக் குற்றவாளிகள் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்தனர்.

இந்த மனு நேற்று ப்ரீத்தி பத்மன் சூரசேன,ஜனக் த சில்வா,சம்பத் அபேக்கோன் ஆகிய மூவரடங்கிய நீதியரசர் ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்ட மா அதிபரின் சார்பில் ஆஜரான அரச தரப்பு சட்டத்தரணி இந்த மேன்முறையீட்டு மனுக்களை விசாரிப்பதற்கு நாளொன்றை ஒதுக்குமாறு கோரிக்கை முன்வைத்தார்.

அதன்படி உரிய மேன்முறையீட்டு மனுக்களை ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு மூவரடங்கிய நீதியரசர் ஆயம் உத்தரவிட்டது.

2015 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் புங்குடுதீவில் சிவலோகநாதன் வித்தியா என்ற பாடசாலை மாணவி கடத்தப்பட்டு பின்னர் கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கில் எழுவருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இவர்கள் எழுவரும் இந்த மரண தண்டனை சட்டத்துக்கு முரணானது என தெரிவித்து இந்த தீர்ப்பை வலுவிழக்கச் செய்யுமாறு உத்தரவிடக்கோரி மேன்முறையீடு செய்தனர். மேலும் தங்களை இந்த குற்றச்சாட்டிலிருந்து விலக்கி தாம் நிரபராதிகள் என தீர்ப்பளிக்குமாறும் குறித்த மேன்முறையீட்டில் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

## யாழ்...

ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திரதினத்தன்று யாழ்.பல்கலைக் கழகத்தில் இலங்கைக் கொடி இறக்கப்பட்டு பிரதான கம்பத்தில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது.இந்த விடயம் ஒட்டு மொத்த நாட்டு மக்களுக்கு மாத்தரமல்லாது நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்த இராணுவ வீரர்களையும் அவமதிக்கும் செயலாகும். இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

அதேபோன்று யாழ்.பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் உள்ளிட்ட தரப்பினர் இதற்கு இடமளித்தமை தொடர்பில் பொறுப்பு கூறவேண்டும்.

அவர்களிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும். யாழ் பல்கலைக்கழகம் நாட்டு மக்களின் வரிப்பணத்திலேயே இயங்குகின்றது. அதேபோன்று பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் சம்பளம் வழங்கப்படுகின்றது.ஆகவே இது பொருத்தமற்ற செயலாகும். இந்த செயலைப் புரிந்தவர்கள் கைது செய்யப்படவேண்டும்.

இனவாதத்தைத் தூண்டுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி யாழ்.விஜயத்தின் போது குறிப்பிட்டிருந்தார். இத்தகைய பின்னணியிலேயே சுதந்திர தினத்தன்று இத்தகைய விடயம் இடம்பெற்றுள்ளது. ஆகவே இனவாத செயற்பாடாக இதனைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், 30 வருடகால யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்த இராணுவத்தினருக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு எதிராக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாத சமயத்தில் எம்முடைய இராணுவத்தினரை காட்டிக்கொடுக்கும் வகையில் அமையப்பெறும் என தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்-என்றார். (அ)

# ஆளுந்தரப்பு எம்.பிக்கள் சிலர் மிகவிரைவில் பதவி விலகுவர்

### ஹெக்டர் அப்புஹாமி கூறுகிறார்

கொழும்பு, பெப். 07

அமைச்சர்களின் அழுத்தங்களால் குறுகிய காலத்துக்குள் 6 அரச நிறுவனங்களின் தலைவர்கள் பதவி விலகியுள்ளனர். தேசிய மக்கள் சக்திக்குள் காணப்படும் பிரச்னைகளால் கணிசமான ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சர்களின் அழுத்தங்களாலேயே ஓரிரு மாதங்களுக்குள் 6 நிறுவனத் தலைவர்கள் பதவி விலகியுள்ளனர். தற்போதுள்ள 159 ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் கணிசமானோர் இவ்வாண்டுக்குள் நிச்சயம் பதவி விலகுவார்கள். அமைச்சொன்றின் செயலாளருக்கு எதிராக மேலதிக செயலாளர் ஒருவர் தனது உரிமைக்காக நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்குள் அனுபவம் தொடர்பான பல பிரச்னைகள் காணப்படுகின்றன. அதிகாரத்துக்கு வர முன்னர் நாமல் கருணாரத்ன போன்றோர் வயல்களில் இறங்கி முதலைக் கண்ணீர் வடித்து போராட்டங்களை முன்னெடுத்தமையை தற்போது விவசாயிகள் அவர்களுக்கு நினைவுபடுத்துகின்றனர். தேர்தலுக்கு முன்னர் நெல் கிலோ ஒன்றுக்கான உற்பத்தி செலவு 160 ரூபா எனக் கூறியவர்கள். இன்று அதனை விடக் குறைவான நிர்ணய விலையையே அறிவித்திருக்கின்றனர்.

அவர்கள் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு நெல் ஆலை உரிமையாளர்களின் ஒத்துழைப்பு கிடைத்தமையால் அவர்களுக்கு இலாபம் கிடைக்கக் கூடிய தீர்மானங்களையே அரசாங்கம் முன்னெடுக்கின்றது. இதனால் அப்பாவி சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இவற்றுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பதற்காக மக்கள் வீதிக்கிறங்கி போராடுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர் - என்றார். (அ)

## ஜனாதிபதியை சந்தித்தனர் புதிய முப்படைத் தளபதிகள்



கொழும்பு, பெப். 07

புதிய முப்படைத் தளபதிகள் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில், முப்படைகளின் தளபதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்தனர்.

புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த றொட்றிக்கோ, புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

பதவியேற்ற பின்னர், முப்படைத் தளபதிகள் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதியைச் சந்தித்ததோடு ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசுகளையும் வழங்கினர்.

## சட்டமா...

முன்னெடுத்தனர்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க இனந்தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில், இந்த கொலை வழக்குடன் தொடர்புடைய மூன்று நபர்களை விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க பரிந்துரை செய்திருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் இணைந்து பதாகைகளை ஏந்தியவாறு உயர் நீதிமன்ற வாயிலில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். (அ)

## திஸ்ஸ...

ஆளுநரிடம் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

எமக்கு எமது காணிகளை விடுவித்து தரவேண்டும். விகாரைக்கு உரியதாகக் கூறப்பட்ட மாற்றுக்காணியின் உறுதிகளில் சிக்கல்கள் உள்ளன. அதனால் எமக்கு அந்த மாற்றுக்காணிகள் வேண்டாம். எமது காணியை விடுவித்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (அ-05)

## வட்டுக்கோட்டை...

இந்நிலையில் உண்மையறியாத அந்த வயோதிபப் பெண் 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார். தான் ஏமாற்றப்பட்ட விடயம் பின்னர் தெரியவந்த நிலையில் இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். குறித்த சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## ஆஸாத் மௌனாவை...

ஞாயிறு தாக்குதல் குறித்து முன்னாள் செயலாளர் ஆஸாத் மௌலானா வெளியிட்டுள்ள தகவல்கள் தொடர்பில் ஊடகமொன்றுக்கு பிள்ளையான் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர் அச்சுறுத்தல் என தெரிவித்து வெளிநாட்டில் நிரந்தர வதிவிடத்தை பெறும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஆஸாத் மௌலானா ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆறு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. ஏன் அவர் அந்தவேளை அது குறித்த விவரங்களை அம்பலப்படுத்தாமல், நான்கு வருடங்கள் காத்திருந்த பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் சனல் 4 இற்கும் சென்றார்?

ஜனாதிபதியும் சி.ஐ.டியினரும் முட்டாள்கள். அவர்களுக்கு ஆயுதங்களை கைவிட்டவர்களுக்கும், ஐ.எஸ். மற்றும் முஸ்லீம் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை புரிந்துகொள்ள முடியாதா?

நான் ஆயுதப்போராட்டத்தை விரும்பாததால் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து முதலமைச்சரானேன்.

2015 முதல் 2020 வரை சிறையிலிருந்த ஒருவரால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற பேரழிவு தாக்குதலை எவ்வாறு திட்டமிட முடியும்.

ஆசாத் மௌலானாவை நாட்டுக்கு மீண்டும் அழைப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளமை சிறந்த விடயம். சி.ஐ.டியினருக்கு ஒத்துழைப்பு வழங்கி ஆஸாத் மௌலானாவை கைது செய்ய உதவுவேன் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## லசந்தவை கொன்றோர் யார்? அரசு வெளிப்படுத்தவேண்டும்



கொழும்பு, பெப். 07

லசந்த விக்ரமதுங்கவின் கொலையாளிகள் யார் என்பதை அரசாங்கம் உடனடியாக வெளிக்கொண்டு வரவேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிலையியல் கட்டளை சட்டம் 27-2 இல் பாராளு மன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பியபோதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து நான் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி பிரதமரிடம் கேள்வி எழுப்பியிருந்தேன்.

இத்தகைய தருணத்தில், இது தொடர்பாக அண்மைக்காலமாக அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன? மற்றும் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் அரசாங்கம் தலையிட்டு வெளிப்படையான விசாரணை நடத்தவேண்டும்.

இது தொடர்பாக வெளிப்படையான விசாரணையை நடத்தி, அவர்களது குடும்பத்தினருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நீதி நியாத்தை நிலைநாட்டி, கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.லசந்த விக்ரமதுங்கவின் கொலையாளிகளை கண்டுபிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ)

## அரிசி விலை மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம்

கொழும்பு, பெப். 07

நெல் கொள்முதல் செய்வதற்கு அரசாங்கம் அறிவித்த உத்தரவாத விலை காரணமாக அரிசி விலை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாக மரந்தகஹமுல்ல அரிசி வியாபாரிகள் கூறுகின்றனர்.

அரசாங்கத்தின் உத்தரவாத விலையில் நெல்லைக் கொள்முதல் செய்து, அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வது சாத்தியமில்லை என்று மரதகஹமுல அரிசி வணிக சங்கத்தின் தலைவர் பி.கே. ரஞ்சித் தெரிவித்தார்.

இதன்காரணமாக, தற்போதைய சூழலைக் கருத்தில் கொண்டு, அரிசி விற்கப்படும் விலைகளை மீண்டும் வெளியிட எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் கூறினார். (அ)

## மன்னாரில் காற்றாலை மூலம் 50 மெகாவாட் மின்சார உற்பத்தி

### தனியார் நிறுவனத்திற்கு வழங்க அனுமதி

கொழும்பு, பெப். 07

மன்னாரில் 50 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை மேம்படுத்த ஹேலிஸ் பென்டன்ஸ் லிமிட்டெட்டுக்கு ஒப்பந்தம் வழங்க அரசாங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த முடிவு, கொள்முதல் முறைமீட்டு சபையின் மேற்பார்வையில் நடத்தப்பட்ட விரிவான மற்றும் வெளிப்படையான முறைமீட்டு செயல்முறைக்குப் பின்னர் எடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில், ஹேலிஸ் பென்டன்ஸ் நிறுவனம் சமர்ப்பித்த விண்ணப்பம் திட்டக் குழுவால் பரிசீலிக்கப் படவில்லை.

எனினும், 2024 ஒகஸ்ட் 6 ஆம் திகதி, ஹேலிஸ் பென்டன்ஸ் நிறுவனம் தாக்கல் செய்த முறையீட்டை பரிசீலித்த பின்னர், கொள்முதல் முறைமீட்டு சபை அமைச்சரவைக்கு பரிந்துரை செய்து, கூடுதல் தகவல்கள் ஒப்பந்த பாதுகாப்பை மேலும் உறுதி செய்வதால், இவ்விண்ணப்பத்தையும் மதிப்பீடு செய்ய வேண்டுமென அறிவுறுத்தியது.

இதன்படி, ஒரு அலகு மின்சாரத்தை 4.65 அமெரிக்க டொலர் சதத்திற்கு மிகக் குறைந்த விலையில் ஹேலிஸ் பென்டன்ஸ்க்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னர், ஒரு அலகு மின்சாரத்தை 4.88 அமெரிக்க டொலர் சதத்துக்கு வழங்கப்பட்ட ஏலத்துடன் ஒப்பிடும்போது, 3 பில்லியன் ரூபாவை சேமிக்க முடியுமென தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# லசந்த கொலை வழக்கில் கடமை தவறிய சட்ட மாஅதிபரின் மீது குற்றப் பிரேரணை!

### அஹிம்சா விக்கிரமதுங்க பிரதமரிடம் கோரிக்கை

கொழும்பு, பெப். 07

**ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்குத் தொடர்பில் கடமை தவறிய சட்ட மாஅதிபருக்கு எதிராக குற்றப் பிரேரணையை சமர்ப்பிக்குமாறு அஹிம்சா விக்கிரமதுங்க கலாநிதி ஹரினி அமரசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

பிரதமருக்கு அனுப்பியுள்ள் கடிதத்திலேயே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பிலான விசாரணைகளின் சந்தேக நபர்களாக பெயரிடப்பட்ட மூவரை விடுவிப்பதற்கு கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சட்ட மாஅதிபர் பாரிந்த ரணசிங்க எடுத்த நடவடிக்கை குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த தீர்மானம் தற்செயலானது அல்லவென்பது கடந்த வாரத்தில் இடம்பெற்ற விடயங்களில் தெளிவாவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு முதல் இந்த வழக்கு விசாரணைகள் தீவிரமாக அல்லது நம்பகத்தன்மையுடன் இடம்பெறவில்லை எனவும் அஹிம்சா விக்கிரமதுங்க தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்ட மாஅதிபருக்கு எதிராக குற்றப்பிரேரணையை முன்வைத்து அவரை பதவி நீக்கம் செய்வதே நீதிக்கான அரசாங்கத்தின் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான ஒரேவழி எனவும் அஹிம்சா விக்கிரமதுங்க குறிப்பிட்டுள்ளார். (அ)

# வெளியேறிய விசேட வைத்தியர்கள் மீண்டும் நாட்டுக்கு திரும்பவேண்டும்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கோரிக்கை

கொழும்பு, பெப். 07

நாட்டிலிருந்து கடந்த காலங்களில் வெளியேறிய விசேட வைத்திய நிபுணர்கள் மீண்டும் நாட்டுக்கு வரவேண்டும் என்று சுகாதாரத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அழைப்பு விடுத்துள்ளார். பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2018 ஆம் ஆண்டு வெற்றிடங்களுக்கு இணங்க 2800 விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டில் இருக்க வேண்டும். ஆனால், தற்போது 2000 அளவிலான விசேட வைத்திய நிபுணர்களே இங்கு உள்ளார்கள்.

பலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். அரசியல் காரணிகள் உள்ளிட்ட பல காரணிகளால் தான் அவர்கள் இவ்வாறு வெளியேறினார்கள். நாம் இந்தக் குறைகளை படிப்படியாக நிவர்த்தி செய்து வருகிறோம். இதுதொடர்பான விசேட வைத்திய நிபுணர்களுடனும் வைத்திய சங்கங்களுடனும் நாம் தொடர்ந்தும் பேச்சு நடத்திக் கொண்டுதான் உள்ளோம்.

அவர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய சலுகைகளை பெற்றுக் கொடுத்து அவர்களின் சேவையை நாட்டுக்கு பெற்றுக் கொள்ள நாம் முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். எனவே, நாட்டிலிருந்து வெளியேறிய விசேட வைத்திய நிபுணர்கள் மீண்டும் நாட்டுக்கு வர வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறோம்.

ஓரிரு வருடங்களில் விசேட வைத்தியர் ஒருவரை எம்மால் உருவாக்க முடியாது. இதனால்தான் வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கான குறைகளும் காணப்படுகின்றன. வரவு - செலவுத் திட்டத்தில் இவர்களுக்கான நிவாரணங்களை வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் - என்றார். (அ)

# 550 மெ. தொன் ஹைட்ரோலிக் சுண்ணாம்பு அரசாங்கத்தில் உள்ள ஒருவரால் இறக்குமதி

### டி.வி. சானக்க குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 07

தற்போதைய அரசாங்கத்தில் உள்ள ஒருவர் அதிக குரோமியம் உள்ளடங்கிய ஹைட்ரோலிக் சுண்ணாம்பு இறக்குமதி செய்வதன் மூலம் பெரும் தொகை நிதியை சம்பாதித்துள்ளதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கைக்கு சுமார் 550 மெற்றிக் தொன் ஹைட்ரோலிக் சுண்ணாம்பு வந்துள்ளதாகவும், இவை காலி, அம்பதலே மற்றும் ரத்மலான நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள தாகவும் டி.வி. சானக குறிப்பிட்டார்.

குழாய் நீரை சுத்திகரிப்பதற்காக ஹைட்ரோலிக் சுண்ணாம்பு பயன்படுத்துகின்றன.

இலங்கையில் தற்போது குழாய் நீரில் அதிக அளவு குரோமியம் உள்ளது, இது புற்றுநோய், சிறுநீரக நோய் மற்றும் கல்லீரல் நோய்களுக்கு வழிவகுக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

எனவே, குழாய் நீரை குடிக்கும் போது கவனமாக இருங்கள்," என்று பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக கூறினார்.

இந்த விடயத்தை தான் ஆராய்ந்து, ஒரு நாளுக்குள் சபையில் அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதாக அமைச்சர் வசந்த சமரசிங்க பதிலளித்தார். (அ)

# தேங்காய்ப் பற்றாக்குறைக்கு முறையான அரசாங்க கொள்கை இன்மையே காரணம்

### பிரதமர் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 07

தென்னைப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கு முறையான அரசாங்கக் கொள்கை இன்மையே தற்போது நிலவும் தேங்காய் பற்றாக்குறைக்குக் காரணம் என பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்

பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த பிரதமர்,

இந்த பிரச்னையை தீர்ப்பதற்கு தற்போதைய அரசாங்கம் விரிவான கொள்கையை வகுப்பதில் செயற்பட்டு வருகிறது.

இந்தத் துறையை ஆதரிப்பதற்காக ஏற்கனவே பல குறுகிய கால திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக, தென்னை செய்கையை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்கம் கூடுதல் நிதியை ஒதுக்கியுள்ளது.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள் உள்ளூர் தேங்காய் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்தி வருகின்றன.

பயனுள்ள விவசாய நடைமுறைகளை அடையாளம் காணல், நோய்கள் மற்றும் பூச்சிகளை நிர்வகிப்பதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் தென்னை துறையை வலுப்படுத்துவதற்கான கொள்கை பரிந்துரைகளை சமர்ப்பித்தல் ஆகியவை இதில் அடங்கும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org